31 01 2025 Friday 7 15 Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- செவித்திறன், கண்பார்வை குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மூன்றாவது தேசிய கருத்தரங்கை குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.
- தில்லியை அதிநவீன நகரமாக மாற்ற பிஜேபி விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்
- பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணம் குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது
- தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.
- இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

<<<<<<<>>>>>>>>

செவித்திறன் மற்றும் கண்பார்வை குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளிக்கான மூன்றாவது தேசிய கருத்தரங்கை குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் இன்று சென்னையை அடுத்த முட்டுக்காட்டில் தொடங்கி வைத்தார்.

மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத்துறை, சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய நிறுவனமும், தன்னார்வ தொண்டு அமைப்பும் இணைந்து இந்த கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியின் போது குடியரசு துணைத்தலைவர், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிறுவன வளாகத்தில் மரக்கன்றுகளையும் நட்டு வைத்தார்.

தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்களையும் அவர் வழங்கினார்.

செவித்திறன் மற்றும் கண்பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளின் குறைகளை அவர் கேட்டறிந்தார்.

இணையதளம் மூலமாக தகவல் அணுகுமுறையை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் அப்போது உறுதியளித்தார்.

<<<<<<<>>>>>>>>

2025-26ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நாளை தாக்கல் செய்கிறார்.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் இருஅவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவின் உரையுடன் இன்று தொடங்கியது.
குடியரசுத்தலைவர் உரையைத் தொடர்ந்து, பொருளாதார ஆய்வறிக்கையை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இரு அவைகளிலும் தாக்கல் செய்தார்.

அதில், வேளாண்மை மற்றும் சேவை துறைகளின் ஆதரவுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, நிலையாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதகமான வேளாண் சூழல் மற்றும் கரீப் பருவத்தில் அதிக விளைச்சல் காரணமாக கிராமப்புறங்களின் தேவை மேம்பட்டு வருவதாகவும் பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நாளை தாக்கல் செய்யவுள்ளார்.

<<<<<<>>>>>>>>

குடியரசுத்தலைவர் குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் திருமதி. சோனியா காந்தி தெரிவித்த கருத்துக்கு பிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் குடியரசுத் தலைவரின் உரை பற்றி கருத்துக் கூறிய திருமதி. சோனியா காந்தி, உரையின் முடிவில் குடியரசுத் தலைவர் மிகவும் சோர்வடைந்துவிட்டதாகவும், இதைவிட மோசமாக அவரால் பேச முடியாது என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்கு சமூகவலைதளத்தில் கண்டனம் தெரிவித்துள்ள பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, ஏழைகளுக்கு எதிரான பழங்குடியினர்களுக்கு எதிரான போக்கை காங்கிரஸ் கட்சி கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே உதாரணம் என்று தெரிவித்துள்ளார்.

அவரது இந்த கருத்துக்கு காங்கிரஸ் கட்சி நிபந்தனையற்ற மன்னிப்பு கோர வேண்டும் என்றும் திரு. நட்டா அதில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>>>

தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் முடிவடைய மூன்று நாட்களே உள்ள நிலையில், பல்வேறு தொகுதிகளிலும் பிஜேபி, ஆம் ஆத்மி, காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று துவாரகாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்று, பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார்.

தில்லியில் பிஜேபி ஆட்சிக்கு வந்தால், இந்த மாநகரை அதிநவீன நகரமாக மாற்ற விரும்புவதாக பிரதமர் தெரிவித்தார்.

தில்லியில் இரட்டை எஞ்சின் அரசு இருந்தால் தான் ஏழைமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் விருப்பங்களும் நிறைவேற்றப்படும் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

லெட்சுமி நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய ஆம்ஆத்மி தேசிய ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், இந்த தொகுதியின் பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் கடந்த ஐந்தாண்டுகளில் மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றவில்லை என்று குறை கூறினார்.

மீண்டும் ஆம் ஆத்மிக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக அம்மாநில தலைமைத்தேர்தல் அதிகாரி திருமதி. Alice Vaz தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தலில் ஒரு கோடியே 56 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கவிருப்பதாக கூறினார்.

13 ஆயிரத்து 700 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள் உள்ளிட்டோர் வாக்களிக்க ஏதுவாக அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திருமதி. Alice Vaz தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணம் குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு.ரன்தீர் ஜெய்ஸ்வால், இந்தியா - அமெரிக்கா இடையேயான ஒருங்கிணைந்த நல்லுறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக பிரதமரின் அமெரிக்கப் பயணம் அமையும் என்று கூறினார்.

பிரதமரின் அமெரிக்க பயணம் தொடர்பான அட்டவனை உரிய நேரத்தில் வெளியிடப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

மும்பை தாக்குதலில் தொடர்புடைய தகவூர் ராணா-வை இந்தியாவுக்கு கொண்டு வருவது குறித்து கேட்ட போது, அமெரிக்காவில் அவர் தாக்கல் செய்த மனு. கடந்த 21ஆம் தேதி நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறினார்.

அவரை விரைவில் இந்தியா அழைத்து வர மத்திய அரசு தேவையான முயற்சிகளை எடுக்கும் என்றும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் நேரிட்ட கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்ட, அலகாபாத் உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஹர்ஷ்குமார் தலைமையிலான ஆணையம் இன்று விசாரணையை தொடங்கியுள்ளது.

சங்கம்காட் பகுதிக்குச் சென்ற ஆணையத்தின் உறுப்பினர்கள், நெரிசல் ஏற்படுவதற்கான காரணம் மற்றும் சூழல் குறித்து, கும்பமேளா ஏற்பாட்டாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

சங்கம் பகுதியில் கடந்த புதன்கிழமை நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர், 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதுகுறித்து நீதி விசாரணை நடத்தி, ஒரு மாதத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய ஆணையத்திற்கு உத்தரவிடப்பட்டது.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுப்பது குறித்தும் இந்த ஆணையம் அரசுக்கு பரிந்துரை செய்யும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு கடந்த 24ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 54 லட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவை எட்டியிருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

ஜனவரி 17ஆம் தேதியுடன் முடிவடைந்த முந்தைய வாரத்தில் 15 ஆயிரத்து 588 கோடி ரூபாய் அளவிற்கு குறைந்திருந்ததாக ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், மத்திய பட்ஜெட் எதிர்பார்ப்புகள் குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>>>

பஞ்சாப் மாநிலம் Ferozepur என்னும் இடத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர், 9 பேர் காயமடைந்தனர்.

சரக்கு வாகனமும், வேன் ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாகவும், காயமடைந்தவர்கள் ஃபெரோஸ்பூர் மற்றும் ஃபரீத்கோட்டில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பஞ்சாப் மாநில அரசு தலா 2 லட்சம் ரூபாய் நிதயுதவி வழங்க உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>>>>

இங்கிலாந்து எதிரான நான்காவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா சற்றுமுன்வரை 2 ஓவரில் மூன்று விக்கெட் இழப்புக்கு 12 ரன் எடுத்துள்ளது

புனேயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<<>>>>>>>>

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்ற முதலில் பேட் செய்த இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 113 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Davina Perrin 45 ரன் எடுத்தார்.

Parunika Sisodia மற்றும் வைஷ்ணவிசர்மா அபாரமாக பந்து வீசி தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

114 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, 15 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 117 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இந்தியா – தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>>>

தேசிய விளையாட்டுப் போட்டியில் இன்று தமிழகத்தின் அபிஷேக் வெண்கலப்பதக்கம் வென்றார்.

உத்ராகண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் Spring Board பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<<>>>>>>>>

ஜாம்ஷெட்பூரில் நடைபெற்று வரும் ஜார்கண்ட் அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று 234 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய தமிழக அணி ஆட்டநேர இறுதியில் 5 விக்கெட் இழப்புக்கு 137 ரன் எடுத்துள்ளது.

<<<<<<END>>>>>>>